# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## OS.No. 372/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சுப்பையா **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 3rd day of July 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 4 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 10.01.2021ம் தேதியில் வாதிக்கு பிரதிவாதிகள் பிறப்பித்துக் கொடுத்த புரோநோட்டின் அசல் வா.சா.ஆ.1 ஆகும். 2) 15.07.2022ம் தேதியில் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி நிறுவனத்தின் இயக்குநர் ஸ்தானத்தில் கையொப்பமிட்டு வாதி பெயருக்கு

பிறப்பித்துக்கொடுத்த தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி சங்கரன்கோவில் கிளைக்குரிய காசோலை எண். 983055–க்கான காசோலையின் அசல் வா.சா.ஆ. 2 ஆகும். 3) 05.08.2022ம் தேதியில் வாதி மேற்படி காசோலையை தனது வங்கி கணக்கில் வசூலுக்கு தாக்கல் செய்ததற்கான ரசீதின் அசல் வா.சா.ஆ. 3 ஆகும். 4) 06.08.2022ம் தேதியில் மேற்படி காசோலை Account Closed என காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதற்கான வங்கி மிமோரண்டத்தின் அசல் வா.சா.ஆ. 4 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi